செய்தி வெளியீடு எண்: 248 / 2018 நாள்: 24.04.2018

**கிராமங்களின் வளர்ச்சியே ஒரு நாட்டின் வளர்ச்சி !**

**வேலூர் மாவட்டம் திமிரி ஊராட்சி ஒன்றியம் மேல்நாயக்கன்பாளையம் ஊராட்சியில் கிராம சுவராஜ் அபியான்திட்டத்தின் மூலம் தேசிய ஊராட்சிகள் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபா கூட்டத்தில் மத்திய அரசின் கணகாணிப்பு அலுவலர் பேச்சு !!**

கிராம சுவராஜ் திட்டத்தின் மூலம் 14.04.2018 முதல் 05.05.2018 வரை மத்திய மாநில அரசுகளின் துறைசார் நலத்திட்டங்கள் அனைத்து மக்களுக்கும் சென்றடையும் வகையில், தினமும் ஒரு நிகழ்ச்சி மூலம் ஒவ்வொரு துறை சார்பாக நலத்திட்ட உதவிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. இந்நிகழ்வின் ஒரு கட்டமாக 73 வது அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான 24.04.2018 இன்று, தேசிய ஊராட்சிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாளை சிறப்பிக்கும் வகையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராம சபா கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்று வேலூர் மாவட்டம் திமிரி ஊராட்சி ஒன்றியம் மேல்நாயக்கன்பாளையம் ஊராட்சியில் சிறப்பு கிராம சபா கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மத்திய அரசு கப்பல் துறை இயக்குநர் திரு.டி.ஜெயசீலன், IDAS அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக் கொண்டனர்.

இந்த சிறப்பு கிராம சபா கூட்டத்தில் கிராம பொருளாதாரத்தை மேம்படுத்திடும் வகையில் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சி திட்டத்தில் இந்த நிதியாண்டிற்கு முதலாம் ஆண்டு திட்டத்தில் சிறுமின்விசை பம்பு அமைத்தல், பேவர் ரோடு அமைத்தல், கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணிகள் போன்ற பணிகளும் இரண்டாம் ஆண்டு திட்டத்தில் விளக்கு வசதி, கல்வெர்ட் அமைத்தல், தடுப்புச்சுவர் அமைத்தல் போன்ற பணிகளும் மற்றும் மூன்றாம் ஆண்டு திட்டத்தில் சாலை அமைத்தல், கால்நடை மருத்தவம் அமைத்தல், ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டுதல், வணிக வளாகம் தேவை, குப்பை தொட்டிகள் வழங்குதல் போன்ற பணிகளுக்கான திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும் கிராம ஊராட்சியில் வீட்டு வரி, தொழில் வரி மற்றும் குடிநீர் வரிகளை முறையாக நிலுவையின்றி வசூலிக்க நடவடிக்கை எடுப்பதுடன் குடிநீர், மின்சாரம் வீணாவதை தடுத்து சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள தீர்மாணிக்கப்பட்டுள்ளது. ஊராட்சியில் தூய்மையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதுடன் முறையாக குளோரினேசன் செய்து 15 நாட்களுக்கு ஒருமுறை மேநீர்தேக்க தொட்டி, சின்டெக்ஸ் ஆகியவற்றை கழுவி சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேல்நாயக்கன்பட்டி ஊராட்சியில் சுகாதார பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்களை கொண்டு குப்பைகள் அகற்றப்பட்டு, தூய்மையாக பராமரிக்கவும் அகற்றப்பட்ட குப்பைகளை மக்கும் குப்பை, மக்கா குப்பை என தரம் பிரித்து அதனை மண்புழு உரமாக்கி பயன்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இவ்வூராட்சியில் அனைத்து வீடுகளுக்கும் கழிவறை கட்டப்பட்டு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் இவ்வூராட்சி திறந்த வெளியில் மலம் கழித்த தடை செய்யப்பட்ட ஊராட்சியாக அறிவிக்கப்பட்டு முழு சுகாதாரம் உள்ள ஊராட்சியாக திகழ உறுதி ஏற்கப்படுகிறது. சுகாதாரம் மற்றும் தடுப்பூசி போடுவதன் அவசியம் குறித்து கிராமப்புற மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மகளிருக்கு அதிகாரமளித்தல் மற்றும் சமூக வளர்ச்சி குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மத்திய அரசு கப்பல் துறை இயக்குநர் திரு.டி.ஜெயசீலன், IDAS அவர்கள் பேசியதாவது:-

வேலூர் மாவட்டம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க மாவட்டம். இச்சிறப்பு மிக்க மாவட்டத்தில் மக்களின் வாழ்க்கை பொருளாதார நிலை உயர அரசு திட்டங்கள் வழியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த திட்டங்கள் முழுமையாக சென்றடைந்துள்ளதா என்பதை 14.04.2018 முதல் 05.05.2018 வரை நடைபெறும் கிராம சுவராஜ் யோஜனா முகாம் காலங்களில் ஆய்வு மேற்கொண்டு அரசுக்கு அறிக்கையாக அளித்திட கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளேன். இன்றைய தினம் நாடு முழுவதும் உள்ள பஞ்சாயத்துகளிலும் சிறப்பு கிராம சபா கூட்டங்கள் நடத்தப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் கிராமங்களின் சிறப்பையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

கிராமத்தின் வளர்ச்சியே ஒரு நாடு வளர்ச்சியடைந்த நாடாக உள்ளது என்று ஏற்றுக்கொள்ள முடியும். கிராமத்தின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி. அரசின் முக்கிய நோக்கம் ஏழை மக்களின் முன்னேற்றமே. கிராமங்களில் உள்ள பிரச்சனைகளில் கிராம மக்களே மன்னர்களாக நின்று தீர்த்துக்கொள்வார்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் தண்ணீர் வளத்தை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதற்காக கிராம மக்கள் அனைவரும் ஒன்று கூடி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் மருத்துவ குணம் நிறைந்த வேப்பமரத்தை வளர்க்க வேண்டும். மேலும் மாட்டு சாணத்தில் இருந்து எரிவாயு எடுத்து வீட்டிற்கு உபயோகிக்க வேண்டும் என்று மூன்று முக்கிய திட்டத்தை அனைத்து கிராம மக்களுடம் கடைபிடிக்க வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மனிதனின் அடிப்படை தேவையான உணவு உடை உறைவிடம் ஆகியவற்றை அடைவதற்கு சிந்தித்து வாழ்க்கையை ஒவ்வொருவரும் வாழ கற்றுக்கொள்ள வேண்டும். இதுவே கிராமத்தின் முதல் வளர்ச்சி. கிராமத்தில் உள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நன்றாக படிக்க வைத்து அடுத்த தலைமுறை சிறப்பாக வாழ இப்பொழுதே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கிராமத்தின் தண்ணீர் வளத்தை மேம்படுத்திட உறுதி எடுத்துக்கொண்டு வீட்டில் பயன்படுத்திய கழிவு நீரை சுத்திகரித்து பூமிக்குள் செலுத்தி நிலத்தடி நீரை பாதுகாப்பது இரண்டாவது வளர்ச்சி, நிலங்களின் மண் வளத்தை பாதுகாக்க பிளாஸ்டிக்கை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் விவசாய நிலத்தில் செயற்கை உரங்களை உபயோகிப்பதை தவிர்த்து மண்வளத்தையும் இயற்கையான உணவுகள் உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்குவதே கிராமத்தின் மூன்றாவது வளர்ச்சி. இதுபோன்று கிராமத்தின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு கிராம பொதுமக்களும் உறுதி எடுத்து அரசின் குறிக்கோள் வெற்றியடையும் வகையில் செயல்பட வேண்டும் என்று மத்திய அரசு கப்பல் துறை இயக்குநர் திரு.டி.ஜெயசீலன், IDAS அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

கிராமத்தின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்ற நோக்கத்துடன் அரசியலைம்பு சட்டம் உருவாகி 73 ஆண்டான இன்றைய தினத்தில் வேலூர் மாவட்டத்தில் உள்ள 743 பஞ்சாயத்துகளிலும் கிராம சபா கூட்டங்கள் நடத்தி கிராமங்களில் செயல்படுத்திய வளர்ச்சிப் பணிகள் குறித்து விவாதித்து குறை நிறைகளை கிராம மக்கள் தெரிந்து கொள்ளும் விதமாக சிறப்பு கிராம சபா கூட்டம் நடைபெறுகிறது. மேலும் இந்த கிராம சுவராஜ் யோஜனா முகாம் 14.04.2018 முதல் 05.05.2018 வரை நடைபெறுகிறது. இந்த காலங்களில் கிராமத்தில் 8 துறைகள் வாரியாக பொதுமக்களுக்கு செயல்படுத்திய திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் மக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

கிராம மக்கள் அனைவரும் வங்கி கணக்கு, இலவச எரிவாயு, தூய்மை கிராமம், பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு, சுகாதார விழிப்புணர்வு, விவசாயத்திற்கு தேவையான மானயங்கள் போன்ற திட்டப்பணிகள் குறித்து தெரிவிக்கப்பட்டு திட்டம் முழுமையடைய நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் செயல்படுத்துவார்கள். அதனடிப்படையில் இன்று திமிரி வட்டாரம் மேல்நாயக்கன்பாளையம் கிராமத்தின் முக்கிய பிரச்சனை குடிநீர் பிரச்சனை. இது உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். காவேரி கூட்டு குடிநீர் திட்ட பணிகளில் விடுபட்ட அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கிராமங்களில் உள்ள குளங்கள் ஏரிகளை பொதுமக்கள் பாதுகாக்க முன்வரவேண்டும்.

நமது மாவட்டத்தில் கணியம்பாடி ஒன்றியத்தில் நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு மாவட்டத்தின் வறட்சி பகுதியான கந்திலி, திருப்பத்தூர், ஜோலார்ப்பேட்டை, நாட்றம்பள்ளி பகுதியில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகறிது. இது குறிகளுக்கும் விரிவு படுத்தப்படும். மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் தெரிவித்துள்ள மூன்று முக்கிய திட்டங்களை கிராம மக்கள் அனைவரும் உறுதி எடுத்து அனைவருக்கும் வங்கி கணக்கு, ஒவ்வொரு வீட்டிலும் வேப்ப மரம், சாண எரிவாயுவை பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டு கிராமத்தின் வளர்ச்சியே ஒரு நாட்டின் வளர்ச்சி என்ற எண்ணதிதை மனதில் எடுத்து கிராம மக்கள் செயல்பட்டு தன்னுடைய கிராமத்தை முன்மாதிரி கிராமமாக மாற்றிட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கிராம சபா கூட்டத்தில் சுகாதார துறையின் மூலம் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்ட 5 நபர்களுக்கு மருத்துவ உபகரணங்களும், வருவாய்த் துறையின் சார்பில் 11 நபர்களுக்கு பல்வேறு அரசு சான்றிதழ்களும், கால்நடைத்துறையின் சார்பில் 10 நபர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளும், வேளாண்மைத் துறையின் சார்பில் 7 நபர்களுக்கு தென்னங்கன்று மற்றும் லைட் டிராப்ஸ் கருவியும், மத்திய அரசின் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தில் 4 நபர்களுக்கு எரிவாயு இணைப்பும், 10 நபர்களுக்கு மின்னணு குடும்ப அட்டையும், வங்கிகளின் மூலம் முத்ரா திட்டத்தில் 3 நபர்களுக்கு கடனுதவித் தொகையும், பிரதம மந்திரியின் ஜன்தன் திட்டத்தில் 5 நபர்களுக்கு வங்கி கணக்கும், 11 நபர்களுக்கு பிரதம மந்திரியின் விபத்து மற்றும் ஆயுள் காப்பீடும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.பெரியசாமி, மகளிர் திட்ட இயக்குநர் திரு.சிவராமன், தனித்துணை ஆட்சியர் திரு.பேபி இந்திரா, முன்னோடி வங்கிகளின் மேலாளர் திரு.தாமோதரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.வின்சென்ட், திரு.வேதமுத்து மற்றும் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.